# <u>In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.</u>

அ.வ.எண். 90/2019 தேதி-30.06.2025

(P.W.1) - சித்ரா

**<u>குறுக்கு விசாரணை</u>**

வழக்கு பட்டிகை சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் 261/14. அது மிடாலம் வில்லேஜில் உள்ளது. நான் யாரிடமிருந்து அதை விலைக்கு வாங்கினேன் என்றால் எனது மாமியார் கனகம் என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கினேன். எனது பெரிய மாமனார் ஆன தங்கையன் இந்து மதத்தைச்சார்ந்தவர் என்றால் சரிதான். தங்கையன் என்பவருக்கு வாரிசுகளாக அவரது மனைவியும் 3 பிள்ளைகளும் உள்ளார்கள் என்றால் சரிதான். அந்த 3 பிள்ளைகளின் பெயர் என்ன என்றால் (1) பத்மா, (2) விமலா, (3) ஜெயா ஆகும்.

மேற்படி 3 பிள்ளைகளிடமிருந்து நான் விலைக்கு வாங்கவில்லை என்றால் சரிதான். அது என் மாமியான கனகம் என்பவரின் பெயரில் இருந்தது. அதனால் அவரிடமிருந்து வாங்கினேன். தங்கையனிடமிருந்து கனகத்திற்கு மட்டுமே உரிமையான சொத்து என்பதை காண்பிப்பதற்காக நீதிமன்றத்தில் ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது தேவையில்லை அதனால் தாக்கல் செய்யவில்லை.

எனக்கு 1/4 பங்குதான் உண்டு என்றாலும் மேற்படி 3 பிள்ளைகளுக்கு 3/4 பங்கு உள்ளது என்றாலும் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து ஆதியில் தங்கையன் என்பவருக்கு உரிமைப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ- 1 ஆவணத்தில் 4 எல்லைகளில் கிழக்கு எல்கை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தின் பழைய சர்வே எண் என்ன என்றால் 1729. பிரதிவாதியின் சொத்து ரீசர்வே எண் 261/16 என்றால் அதற்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அவர்கள் எங்கள் குடும்ப உறுப்பினர்கள் அல்ல. எனது சொத்தின் சர்வே எண்ணும் 261/14 பிரதிவாதியின் சர்வே எண் 261/16 கொண்ட சொத்தின் பழைய சர்வே எண் 1729 என்றால் சரிதான்.

பழைய சர்வே எண் 1729 உட்பிரிவு ஆகப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி 1729 உட்பிரிவு ஆகாததால் பிரதிவாதி மற்றும் வாதி கூட்டு உரிமையாளர்கள் என்றால் பிரதிவாதிகள் எங்கள் குடும்ப உறுப்பினர்கள் அல்ல. பிரதிவாதி எந்த ஆண்டில் இந்த வழக்கு பட்டிகை சொத்தை வாங்கினார் என்றால்

அதுபற்றிய விபரம் எனக்குத் தெரியாது. நான் பட்டிகை சொத்தை வாங்குவதற்கு முன்பே பிரதிவாதி அங்கு வீடு வைத்து குடியிருந்தாரா என்றால் அவர்கள் எங்கள் குடும்ப உறுப்பினர்கள் அல்ல. பிரதிவாதி யாரிடமிருந்து மேற்படி சொத்தை வாங்கினார் என்றால் எனக்குத் தெரியாது. பிரதிவாதி என்னுடைய குடும்பத்திலிருந்துதான் சொத்தை வாங்கியிருக்கிறார் என்றால் அது எங்கள் சொத்துள்ள சர்வே எண்ணில் வரவில்லை.

பிரதிவாதி 1995 ஆம் ஆண்டு எனது குடும்பத்திலிருந்து சொத்தை வாங்கி அனுபவித்து வந்தார் என்று சொன்னால் அவர் எப்போது அங்கு வந்தார் என்பது பற்றிய விபரம் எனக்குத் தெரியாது. பிரதிவாதியின் வீட்டிற்கு மின்இணைப்பு உள்ளதா என்றால் அதுபற்றிய விபரம் எனக்குத் தெரியாது. அதற்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

பட்டிகை சொத்து வெள்ளியாவிளை, ஈச்சன்விளை சாலையின் இடதுபக்கம் உள்ளது என்று சொன்னால் சரிதான். பட்டிகை சொத்தின் கிழக்கு பக்கம் யாருடைய சொத்து என்றால் ராஜ் என்பவரின் சொத்து. மேற்கு பக்கம் யாருடைய சொத்து என்றால் முருகேசன் என்பவருடைய சொத்து. மேற்படி இரண்டு பக்கத்திற்கும் நடுவேதான் வழக்கு பட்டிகை சொத்து உள்ளது என்று சொன்னால் சரிதான். எனக்கு கிரையம் கொடுக்கப்பட்ட ஆண்டு 2010 ஆம் ஆண்டு என்று சொன்னால் சரிதான். 1999 ல் தங்கையன் என்பவர் பிரதிவாதிக்கு வீட்டிற்கு மின்இணைப்பு கொடுப்பதற்காக எழுத்துப்பூர்வமான அதிகாரம் கொடுத்துள்ளார் அதன் அடிப்படையில் மின்இணைப்பு பிரதிவாதியின் வீட்டிற்கு கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் பட்டிகை சொத்தில் மின்இணைப்பு, மின்கம்பம் எதுவும் இல்லை.

வழக்கு பட்டிகை சொத்து கனகத்திற்கும் 3 பிள்ளைகளுக்கும் வாக்கால் பாகம் பிரிக்கப்பட்டு வழக்கு பட்டிகை சொத்து கனகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது.